## 1. ஆதார் அட்டை விண்ணப்பிக்கும் முறைகள் - Aadhar Card Apply!

ஆதார் அட்டை பெற பதிவு செய்ய கட்டணம் எதுவும் செலுத்த தேவையில்லை. ஒருவர் ஒரு முறை மட்டுமே ஆதார் பதிவு செய்ய வேண்டும்.

**தேவைப்படும் ஆவணங்கள்:**

- ✓ அடையாள அட்டை
- ✓ இருப்பிடச் சான்று

- ❖ அடையாள அட்டைக்கு சான்றாக வாக்காளர் அடையாள அட்டை, ரேஷன் கார்டு, பாஸ்போர்ட், ஓட்டுநர் உரிமம், பான் கார்டு, அரசு ஐடி கார்டு இவற்றுள் ஒன்றை நீங்கள் வழங்கலாம்.

- ❖ இருப்பிடச் சான்றாக கடைசி மூன்று மாதங்களுக்குள் செலுத்திய தண்ணீர் கட்டண ரசிது, மின்சார கட்டண ரசிது அல்லது தொலைபேசி கட்டண ரசீது) இவைகளில் ஏதேனும் ஒன்றை சான்றாக வழங்கலாம்.

- ❖ ஒரு வேளை உங்களிடம் மேற்கூறிய சான்றுகள் இல்லையென்றால், எம்.பி. / எம்.எல்.ஏ. / கெசட்டட் ஆபீசர் / தாசில்தார் / பஞ்சாயத்து தலைவர் ஆகியோர் வழங்கும் புகைப்படத்துடன் கூடிய இருப்பிடச் சான்றிதழ்கள் சான்றாக எடுத்து கொள்ளலாம்.

**ஆதார் பதிவு:**

பிறகு, பதிவு படிவத்தை ஆன்லைனில் இருந்து பதிவிறக்கம் செய்து அதனை நிரப்ப வேண்டும். படிவத்தை பதிவிறக்கம் செய்ய கீழே கொடுக்கப்பட்டுள்ள இணையமுகவரிக்கு சென்று படிவத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

படிவத்தை பதிவிறக்கம் செய்ய:

https://uidai.gov.in/images/aadhaar_enrolment_correction_form_version_2.1.pdf

விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து அதனை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

அடையாளச் சான்று மற்றும் முகவரியின் சான்று போன்ற துணை ஆவணங்களுடன் படிவத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

**பயோமெட்ரிக்ஸ் தகவல்கள்:**

- ✓ புகைப்படம்
- ✓ கைரேகை
- ✓ கண்ணின் கருவிழிப்படலம்

- ❖ 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் - பெற்றோரின் / பாதுகாவலரின் பெயர், ஆதார் மற்றும் வழங்க வேண்டிய பயோமெட்ரிக்ஸ்.

- ❖ வழங்கப்பட்ட அனைத்து விபரங்களையும் மதிப்பாய்வு செய்யுங்கள், மறுஆய்வு செயல்பாட்டின் போது தேவைப்பட்டால் ஏதேனும் திருத்தங்கள் செய்து முழுமையான சேர்க்கை செய்யுங்கள்.

- ❖ புகைப்படம் போன்றவை பதியப்பட்டு ஒரு தற்காலிக எண் வழங்கப்படும். - இந்த எண் 28 இலக்கங்களை கொண்டதாக இருக்கும்.

- ❖ முதல் 14 எண் அத்தாட்சி எண்ணாகும் மீதமுள்ள 14 இலக்க எண் பிறந்த தேதி மற்றும் நேரத்தை குறிப்பது ஆகும். தற்காலிக எண்ணை வைத்து ஒருவரின் ஆதார் விபரங்களை கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

- ❖ 14 இலக்க பதிவு எண்ணைக் கொண்ட ஒப்புதல் சீட்டை சேகரிக்கவும். இவை ஆதார் அட்டையின் நிலையை சரிபார்க்க பயன்படுகிறது. உங்கள் ஆதார் அட்டை கிடைக்கும் வரை ஒப்புதல் சீட்டு பாதுகாப்பாக வைத்து கொள்ள வேண்டும்.

- ❖ நீங்கள் அளித்த தகவல்கள் சரிபார்க்கப்படும். அவை சரியாக இருந்தால் ஆதார் அட்டை உங்கள் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். ஆதார் எண் கிடைக்க 60 முதல் 90 நாட்கள் வரை ஆகலாம்.

- ஆதார் கடிதங்களை அச்சடிப்பது வினியோகிப்பது இந்தியா போஸ்ட்டின் வேலை. ஆதார் கடிதங்களை உரியவரிடம் கொடுக்க இந்தியா போஸ்ட் சாதாரணமாக 3-5 வாரங்கள் எடுத்துக்கொள்வார்கள்.

**விண்ணப்பத்தின் நிலையறிய:**

- https://portal.uidai.gov.in/ResidentPortal/statusLink இந்தத் தளத்திற்குச் சென்று உங்களுக்கு வழங்கப்பட்ட எண்ணையும், தேதியையும் குறிப்பிட்டு விண்ணப்பத்தின் நிலையைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

- இருப்பினும், ஒரு நபருக்கு ஆதார் அட்டை தேவைப்பட்டால் மற்றும் அவசரமாக இருந்தால், ஆதார் அட்டையின் நகலை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம், இது இ-ஆதார் என்றும் அழைக்கப்படுகிறது.

**இ-ஆதார் அட்டையை ஆன்லைனில் பெற நீங்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்:**

- UIDAI இன் ஆதார் அட்டை அதிகாரப்பூர்வ வலைத்தளத்தைப் பார்வையிடவும்.

- பதிவு எண் அல்லது ஆதார் எண்ணைப் பயன்படுத்தி படிவத்தை நிரப்பவும். உங்களிடம் பதிவு எண் இருந்தால், பதிவு எண்ணை உள்ளிடவும். மேலும் அதனுடன் ஒப்புதல் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள படி தேதி மற்றும் நேரத்தை உள்ளிட வேண்டும்.

- பின்னர் உங்களின் பெயர், பின்கோடு மற்றும் நீங்கள் உங்கள் விண்ணப்பத்தில் பதிவு செய்த தொலைபேசி எண்ணிற்கு பதிவு செய்ய வேண்டும்.

- ஆதார் அட்டை எண் உங்களுக்கு UIDAI மூலம் முன்பே குறுஞ்செய்தியாக அனுப்பப்படும். அதனை பயன்படுத்தியும் நீங்கள் உங்கள் ஆதாரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

- உங்களின் பெயர், அஞ்சல் எண், தொலைபேசி எண் மற்றும் ஆதார் எண்ணை உள்ளீடு செய்ய வேண்டும்.

- அனைத்து விபரங்களும் உள்ளிடப்பட்ட பிறகு OTP உருவாக்கப்படுகிறது, இது ஆதார் கடிதத்தின் வண்ண பதிப்பைப் பதிவிறக்க உதவும், இது ஆதார் அட்டையைப் போலவே செல்லுபடியாகும்.

**ஆதார் அட்டையின் பயன்கள்:**

- கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழைகளுக்கு மிகப் பயன்தரக் கூடியது.

- அரசாங்கத்தின் நலம் தரும் திட்டங்கள் மக்களுக்குப் எளிமையாக சென்றடைய உதவும்.

- வருமான வரி தாக்கல் செய்ய, நிரந்தர கணக்கு அட்டை எண் (PAN) வாங்க, பி.எஃப்., மூலமாக ஓய்வூதியம் பெற, வீட்டு சமையல் எரிவாயு இணைப்பினை பெற, பாஸ்போர்ட் பெற, மத்திய /மாநில அரசுகள் அளிக்கும் நலத்திட்டங்கள் மற்றும் நிதி உதவியினைப் பெற நமக்கு ஆதார் அட்டை பயன்படுகிறது.

## 2. பான்-கார்டு அட்டையை விண்ணப்பிக்கும் முறை - Pan Card Apply!

**ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கும் முறை:**

- https://www.thepancard.com/newpancard.php என்ற இணையதளத்தை Open செய்தவுடன், முதலில் Individual, Army, Navy, Air Force என்ற நான்கு விதமான பிரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கும். அதில் நீங்கள் எந்த பிரிவை சார்ந்தவர்கள் என்று குறிப்பிட வேண்டும்.

- பிறகு தங்களது பிறந்த தேதி மற்றும் பாலினத்தை குறிப்பிட வேண்டும். உங்களது பிறந்த தேதி, மாதம் மற்றும் வருடத்தை சரிபார்ப்பதற்கு ஏதேனும் ஒரு சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

- மேலும் உங்களை அடையாளம் கொள்வதற்கான சான்றிதழ் மற்றும் முகவரியை சரிபார்த்து கொள்வதற்கான சான்றிதழைகளையும் சமர்ப்பிக்க வேண்டும்.

- உங்களை தொடர்பு கொள்வதற்கான மின்னஞ்சல் முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை பதிவு செய்ய வேண்டும். அதில் உங்களை தொடர்பு கொள்வதற்கான

வீட்டு முகவரி அல்லது அலுவலக முகவரி கேட்கப்படும். அதில் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்து உங்களது முகவரியை முழுமையாக பதிவு செய்ய வேண்டும்.

- ❖ பிறகு தங்களுடைய ஆதார் எண் அல்லது ஆதார் சேர்க்கை எண்ணை பதிவு செய்ய வேண்டும்.

- ❖ பின்பு ஆதாரில் உங்களது பெயர் எப்படி உள்ளது என்பதை உள்ளீடு செய்ய வேண்டும். உங்களுக்கு எதன் மூலம் வருமானம் வருகின்றது என்பதை உள்ளீடு செய்ய வேண்டும்.

- ❖ Declaration and Acceptance to Terms of Service என்று கொடுக்கப்பட்டுள்ளதை படித்து விதிமுறைகளை தெரிந்துக் கொள்ளலாம். பின்பு தாங்கள் எந்த ஊர் மற்றும் தேதியை குறிப்பிட வேண்டும்.

- ❖ கொடுக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களையும் சரிபார்த்த பின்பு Submit பட்டனை கிளிக் செய்ய வேண்டும். சமர்ப்பித்த பின்பு கட்டணம் செலுத்த வேண்டும். கட்டணம் செலுத்த Proceed to Pay என்பதை கிளிக் செய்ய வேண்டும்.

- ❖ நிறைய வழிகளின் மூலம் கட்டணம் செலுத்திக் கொள்ளலாம். உங்களுக்கு எது சுலபமாக உள்ளதோ அதை தேர்வு செய்துக் கொள்ளலாம்.

- ❖ நீங்கள் கட்டணத்தை செலுத்திய பின்பு, முன்பு நிரப்பட்ட தகவல் அனைத்தும் PDF வடிவில் கொடுக்கப்படும். அதை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது அச்சுப்பொறி இணைக்கப்பட்டிருந்தால் அதை நேரடியாக அச்சிட்டு கொள்ளலாம்.

- ❖ பிறகு அந்த விண்ணப்பத்தில் இரண்டு பாஸ்போர்ட் சைஸ் போட்டோவை ஒட்ட வேண்டும். வலது புறம் ஒரு போட்டோவையும், இடது புறம் ஒரு போட்டோவையும் ஓட்ட வேண்டும். இடது புறம் ஒட்டிய போட்டோவில் மேற்புரத்தில் கையெழுத்திட வேண்டும். முகத்தின் மீது கையெழுத்திட கூடாது. வலது புறம் ஒட்டிய போட்டோவின் கீழ்புரத்தில் கையெழுத்திட வேண்டும். பின்பு படிவத்தின் கீழே கையெழுத்திட வேண்டும்.

- இந்த படிவத்துடன் பிறந்த தேதிக்கான சான்று மற்றும் முகவரிச் சான்று, அடையாள சான்றை இணைக்க வேண்டும்.

- நீங்கள் பூர்த்தி செய்த படிவத்தில் Acknowledgement Number இருக்கும் அதை போஸ்டல் கவரில் எழுத வேண்டும். பின்பு அந்த படிவத்தை கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**விண்ணபத்தை அனுப்ப வேண்டிய முகவரி:**

6A, 6th Floor, Kences Towers,
#1 Ramakrishna Street, North Usman Road,
T. Nagar, Chennai - 600017.

**ஆப்லைன் மூலம் விண்ணப்பிக்கும் முறை:**

**தேவைப்படும் ஆவணங்கள்:**

**அடையாள சான்றாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணங்கள்:**

- ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, பாஸ்போர்ட், மத்திய அரசு சுகாதார திட்ட அட்டை, ஓய்வூதிய அட்டை, விண்ணபதாரரின் புகைப்படம் கொண்ட ரேஷன் கார்டு அட்டை.

**முகவரிச் சான்றாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணங்கள்:**

- ஆதார் அட்டை, வங்கி கணக்கு அறிக்கை, ஒரு வர்த்தமானி அதிகாரி கையொப்பமிட்ட அசல் முகவரி சான்றிதழ், நுகர்வோர் எரிவாயு இணைப்பு அட்டை, கடன் அட்டை அறிக்கை, அரசு வழங்கிய குடியிருப்பு சான்றிதழ், ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, மின்சார கட்டண ரசீது, பாஸ்போர்ட், விண்ணபதாரரின் முகவரி கொண்ட தபால் அலுவலக கணக்கு அட்டை, தண்ணீர் பயன்பாட்டு ரசீது.

**பிறந்த தேதிக்கான சான்றாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணங்கள்:**

ஆதார் அட்டை, பிறப்பு சான்றிதழ், ஓட்டுநர் உரிமம், திருமண பதிவாளர் வழங்கிய திருமண சான்றிதழ், மதிப்பெண் சான்றிதழ், பாஸ்போர்ட்.

**விண்ணப்பிக்கும் முறை:**

- http://www.incometaxindia.gov.in என்ற இணையதளத்தில் சென்று விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்யவும்.
- இரண்டு பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் மற்றும் அடையாள சான்றாக பாஸ்போர்ட் மற்றும் வாக்காளர் அடையாள அட்டையை பயன்படுத்திக் கொள்ளலாம். முகவரி சான்றாக வங்கி கணக்கு அறிக்கை, பாஸ்போர்ட், மின்சார கட்டண ரசீது போன்றவற்றை பயன்படுத்தி கொள்ளலாம்.
- உங்களது பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்தை அதில் ஒட்ட வேண்டும். விண்ணப்பத்தில் கையொப்பமிட வேண்டும்.
- விண்ணப்பத்தை பூர்த்தி செய்த பின் அருகிலுள்ள பான் சேவைகள் அலுவலகத்தில் ரூ. 94 கட்டணத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.
- 15-30 நாட்களுக்குள் பான் கார்டானது உங்களுக்கு கிடைக்கும்.

## 3. ஆன்லைன் மூலம் குடும்ப அட்டை விண்ணப்பிக்கும் முறை - Ration Card / Smart Card Apply!

**தேவைப்படும் ஆவணங்கள்:**

- குடும்ப தலைவரின் ஆதார் அட்டை
- குடும்ப உறுப்பினர்களின் ஆதார் அட்டைகள்
- குடும்ப தலைவரின் புகைப்படம்

- வாக்காளர் அடையாள அட்டை, மின் கட்டண ரசீது, வங்கிக் கணக்கு புத்தகத்தின் முன் பக்கம், எரிவாயு நுகர்வோர் அட்டை, சொந்த வீடு இருந்தால் அதன் சொத்து வரி, பாஸ்போர்ட், வாடகை ஒப்பந்தம், குடிசை மாற்றும் வாரியத்தின் ஒதுக்கீட்டு ஆணை, தொலைப்பேசி கட்டண ரசீது இவைகளில் ஏதேனும் ஒன்று.

**விண்ணப்பிக்கும் முறை:**

- குடும்ப அட்டை பெறுவதற்கு முதலில் https://www.tnpds.gov.in/ என்ற இணையதள முகவரிக்கு சென்று இணைய முகப்புப்பக்கத்தில் மேல் கடைசியில் சிவப்பு நிற வண்ணத்தில் மின்னணு அட்டை சேவைகள் என்ற கட்டம் இருக்கும். அதன்கீழ் உள்ள மின்னணு அட்டை விண்ணப்பிக்க என்ற பட்டனை கிளிக் செய்ய வேண்டும்.

- பிறகு அதில் இரண்டு Options (புதிய மின்னணு அட்டைக்கான விண்ணப்பம், பழைய குடும்ப அட்டை பதிவு) இருக்கும். அதில் புதிய மின்னணு அட்டைக்கான விண்ணப்பம் என்ற பகுதியை கிளிக் செய்ய வேண்டும்.

- இப்போது விண்ணப்பதாரர்கள் குடும்ப தலைவரின் பெயர், முகவரி போன்ற தேவையான அனைத்து விபரங்களையும் உள்ளிட வேண்டும்.

- பிறகு குடும்பத் தலைவரின் புகைப்படத்தையும் நிர்ணயிக்கப்பட்ட வடிவத்தில் (Image Size: 5.0 M.B) பதிவேற்றம் செய்ய வேண்டும். (குறிப்பு: ஸ்டார் குறியீடு கொடுக்கப்பட்ட அனைத்து விபரங்களையும் கட்டாயம் நிரப்ப வேண்டும்.)

- பிறகு குடும்ப உறுப்பினர் விபரங்களை உள்ளீடு செய்தபின் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டை தேர்வில் இருந்து ஒன்றை தேர்ந்தெடுத்து, (வாக்காளர் அடையாள அட்டை, மின் கட்டண ரசீது, வங்கிக் கணக்கு புத்தகத்தின் முன் பக்கம், எரிவாயு நுகர்வோர் அட்டை, சொந்த வீடு இருந்தால் அதன் சொத்து வரி, பாஸ்போர்ட், வாடகை ஒப்பந்தம், குடிசை மாற்றும் வாரியத்தின் ஒதுக்கீட்டு ஆணை, தொலைப்பேசி கட்டண ரசீது) இவைகளில் ஏதேனும் ஒன்றை அதற்கேற்ற (Image or PDF Size 1.0 M.B) அளவில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

- பின்னர் எரிவாயு இணைப்பு விபரங்கள் மற்றும் அறிவிப்பை சேர்த்து படிவத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

- சமர்ப்பித்த பிறகு, அவர்கள் பதிவுசெய்த தொலைப்பேசி எண்ணிற்கு குறிப்பு எண் வரும். இந்த குறிப்பு எண்ணை வைத்து மீண்டும் முகப்பு பகுதிக்கு சென்று மின்னணு அட்டை விண்ணப்பத்தின் நிலையையும் நீங்கள் சரிபார்க்கலாம்.

- சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் விபரங்களை அரசாங்க அலுவலர்கள் சரிபார்த்த பின்னர், உங்களுக்கு அறிவிப்பு வரும். அதன்பின் நீங்கள் இருக்கும் இடத்திற்கு அருகில் உள்ள நியாய விலை கடைக்கு சென்று உங்களின் குடும்ப அட்டையை (Ration Card/ Smart Card) பெற்றுக் கொள்ளலாம்.

**முக்கிய இணையதள முகவரிகள்:**

- **அதிகாரப்பூர்வ அறிவிப்பு பகுதிக்கு செல்ல:**
https://www.tnpds.gov.in/

- **மின்னணு அட்டை சேவைகள் பகுதிக்கு செல்ல:**
https://www.tnpds.gov.in/pages/registeracard/register-a-card-status.xhtml

- **மின்னணு அட்டை விண்ணப்பிக்க:**
https://www.tnpds.gov.in/pages/registeracard/register-a-card.xhtml

- **கருத்து / புகார் செய்ய:**
https://www.tnpds.gov.in/pages/complaint.xhtml

- **மின்னணு அட்டை விபரத்தில் மாற்றம் செய்ய:**
https://www.tnpds.gov.in/pages/servicerequest/smartcardcrstatus.xhtml

## 4. ஆன்லைன் மூலம் வாக்காளர் அடையாள அட்டை விண்ணப்பிக்கு முறை - Voter Id Card Apply!

**தேவைப்படும் ஆவணங்கள்:**

- விண்ணப்பதாரரின் புகைப்படம்
- முகவரி சான்று - பாஸ்போர்ட், ஓட்டுநர் உரிமம், விவசாய கடன் புத்தகம், வங்கி கணக்கு புத்தகம், தற்போதைய அஞ்சல் அலுவலகத்தின் கணக்கு புத்தகம், குடும்ப அடையாள அட்டை, வருமான வரி மதிப்பீட்டு ஆணை, வாடகை ஒப்பந்தம், தண்ணீர் பயன்பாட்டு ரசீது, மின் கட்டண ரசீது, தொலைபேசி கட்டண ரசீது, எரிவாயு இணைப்பு ரசீது
- அடையாள சான்று - பிறப்புச் சான்றிதழ், மதிப்பெண் சான்றிதழ், பாஸ்போர்ட், பான் கார்டு, ஓட்டுநர் உரிமம், ஆதார் கார்டு.

**விண்ணப்பிக்கும் முறை:**

- முதலில் https://www.nvsp.in/ என்ற இணையதளத்தை Open செய்தவுடன் அதில் Forms என்று கொடுக்கப்பட்டிருக்கும் அதை கிளிக் செய்து அதில் கேட்கப்படும் தகவல்களை நிரப்ப வேண்டும்.
- முதலில் மொழியை தேர்வு செய்ய வேண்டும். மூன்று மொழிகள் கொடுக்கப்பட்டிருக்கும் அதில் உங்களுக்கு எந்த மொழி தெரியுமோ அதை தேர்வு செய்து கொள்ளலாம்.
- மொழியை தேர்வு செய்த பின்பு கீழே கொடுக்கப்பட்டுள்ள விபரங்களை பூர்த்தி செய்ய வேண்டும்.
- அங்கு கொடுக்கப்பட்டுள்ள அனைத்து விபரங்களையும் பூர்த்தி செய்ய வேண்டும்.
- கொடுக்கப்பட்டுள்ள அனைத்து விபரங்களையும் பூர்த்தி செய்த பின் உங்களுடைய பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம், முகவரிச் சான்று, அடையாள சான்று ஆகியவற்றை Choose File என்ற Option மூலமாக Upload செய்ய வேண்டும்.